செய்தி வெளியீடு எண்:823 நாள்:01.10.2021

**செய்தி வெளியீடு**

**அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 153–வது பிறந்த நாள் விழா**

அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 153–வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை, மெரினா கடற்கரை, காமராஜர் சாலையில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு நாளை (02.10.2021) காலை 8.00 மணியளவில், தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவி அவர்கள் மற்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆகியோர் மரியாதை செலுத்த உள்ளார்கள். இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பங்கேற்று சிறப்பிக்க உள்ளார்கள்.

தேசத்தந்தை மோகன்தாஸ் காந்தி அவர்கள் 1869 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் பிறந்தார். அடிமைத் தனத்திலிருந்து விடுபட, ஆயுதம் ஒன்றுதான் தீர்வு என்று எண்ணி உலகம் அதனை பின் தொடர்ந்த காலத்தில். அறவழியாம் அகிம்சையினாலும் அதனை சாதித்திட இயலும் என்று உலகிற்கு உணர்த்தியவர் நம் உத்தமர் காந்தியடிகள். அண்ணல் காந்தியடிகளின் அயராத இந்த விவேகமிக்க உத்தியைக் கண்டு உலகமே வியந்து போற்றிப் பாராட்டியது. அண்ணல்பால் அவர்கள் கொண்டிருந்த மதிப்பும் மரியாதையின் காரணமாக, அயல்நாடுகள் பல அவரது உருவம் பதித்த அஞ்சல் தலைகளை வெளியிட்டு அதிகளவில் சிலைகளும் வைத்து பெருமை தேடிக் கொண்டன.

குஜராத்தில் பிறந்து பல்வேறு இந்திய மொழிகள் பல கற்றறிந்து இருந்தாலும், தமிழ் மொழி மீதும் தமிழ் மக்களின் பால் அண்ணல் கொண்டிருந்த அன்பும் நேசமும் அளவிடர்க்கறியது. பலமுறை தமிழகத்திற்கு வருகை தந்து பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்ட அண்ணல் காந்தியடிகள் சென்னையில் 24.12.1933–ல் நடந்த தமிழன்பர் மாநாட்டிற்காக அவர் விடுத்த செய்தியில் "எனது தமிழறிவு சொற்பமே, ஆயினும் நான் தமிழின் அழகையும் வளத்தையும் நான் நன்கு உணர்கிறேன். தமிழை அலட்சியம் செய்வது என்பது ஒரு பெருங்குற்றம் என்பது என்னுடைய அபிப்பிராயம்" என்று தமிழ் மீதான தமது அளவு கடந்த ஈடுபாட்டினை மிகவும் பெருமிதத்தோடு குறிப்பிட்டுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்டு தன் உயிரைத் தந்திட்ட விடுதலைப் போராட்டத் தியாகிகளுக்கு மணிமண்டபங்கள், சிலைகள் அமைக்கப்பட்டுள்ளதோடு, அன்னாரின் பிறந்த நாள் மற்றும் நினைவு நாட்களில் அவர்தம் அருமைப்

பெருமைகளை நினைவு கூறுகின்ற வகையில், அரசின் சார்பில் சிறந்த முறையில் விழாக்களாகக் கொண்டாடப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நாட்டிற்காக அரும்பாடுபட்ட சுதந்திரப் போராட்ட தலைவர்கள் அனைவரையும் போற்றி பெருமைச் சேர்க்கின்ற வகையில் ஒவ்வொரு ஆண்டும் சுதந்திரத் தினம் மற்றும் குடியரசு தின விழாக்களின்போது அனைத்து மாவட்டத் தலைநகரங்களில் அமைக்கப்பட்டுள்ள தியாகத் தலைவர்களின் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளார்கள். மேலும் தனது சுதந்திர தின விழா உரையில், நம் நாட்டின் விடுதலைக்காக அரும்பாடுபட்ட உத்தமர் காந்தியடிகள், கப்பலோட்டியத் தமிழன் வ.உ.சிதம்பரனார் மற்றும் மகாகவி பாரதியார் ஆகியோர்க்கு பெருமைக் சேர்க்கின்ற வகையிலும், இன்றைய இளைய தலைமுறையினர் அறிந்து கொள்ளும் வகையிலும் பல்வேறு புதிய அறிவிப்புகளை வெளியிட்டு செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளார்கள்.

ஆண்டுகள் 153 கடந்தாலும் உத்தமர் காந்தியடிகளின் அறவழியும்; அகிம்சை வழிக் கோட்பாடுகளும் இன்றல்ல; என்றென்றும் மங்கிடாமல் போற்றிப் புகழப்படும் என்பதில் ஐயமில்லை.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9